முருகப்பெருமான் துணை

**மகான் நாரதர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

15.12.2022, வியாழக்கிழமை

1. ஞானலோகம் படைக்க வந்த
ஞானியே ஆறுமுக அரங்கனே
வானவர்கள் வியந்து நோக்கும்
வள்ளலே வாழுகின்ற தவசியே
2. தவசியே உன் பெருமை கூறி
தக்கபடி சுபகிருது தேள் திங்கள்
அவனியில் இருபான்நவ திகதி குருவாரம்
(சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 29 ம் நாள் 15.12.2022, வியாழக்கிழமை)
அறிவிப்பேன் அனுகூல ஆசி
3. ஆசிதனை நாரதர் யானும்
அகிலம் மாற்றம் காண உரைப்பேன்
ஆசிபெற்று பிரணவக் குடிலுடன்
அரங்கமகான் தொடர்பு கூட்டும் மக்களுக்கு
4. மக்களுக்கு மனக்கவலை தீரும்
மரணம் தனையே வெல்லுகின்ற
ஆக்கமும் ஊக்கமும் கிட்டும்
அறத்தின் பலம்தனை அறியும்
5. அறிகின்ற வாய்ப்பும் சிறப்பும்
அரங்கமகான் யாரென்கின்ற
அறிவும் தெளிவும் கிட்டும்
ஆபத்தை எதிர்காலத்தை கணிக்கும்
6. கணிக்கும் ஞான ஆற்றலும்
கனிவான நடத்தை போக்கும்
தணிகாசலன் அருளால் கிட்டும்
தன்னலம் நீக்கி வாழும் பக்குவம்
7. பக்குவமும் பரோபகார மேல்கதி
பாடிடுவேன் சர்வ பலமும்
தேக்கமின்றி உலக மக்கள்
தேசிகன் வழி அடைந்து உயர்வர்
8. உயர்வான நிலைகள் தன்னை
உண்மை நெறி கொண்டுமே
தயவாக மக்களெல்லாம் அடைந்து
தரணியோர் ஞானவான்கள் எனும்
9. எனும் புதுமை பலம் கூடி
இந்த உலகை ஞானஉலகாக
ஞானதேசிகன் அனுகூலம் தன்னில்
நம்பகமுற மாற்றி இயக்குவர்

10. இயக்கமே ஆறுமுகனார் ஆசியாக
இணைந்து அரங்கன் வழி
தயக்கமின்றி வழிகாட்டல் தொடர
தரணியில் அரங்கன் உபதேசம்

11. உபதேசமே ஆறுமுகப் பெருமான்
உயர் வேதமாக அருள்புரிந்து
அபயமென தேசமெல்லாம் பாதுகாப்பு
அனுகியே உலகமாற்றம் நிகழும்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–